**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 65/2022 தேதி-20.11.2025
(P.W.1) - ராஜரத்தினம்

குறுக்கு விசாரணை

1. வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். சுவாமிநாதன் என் தாத்தா என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு மொத்தம் எவ்வளவு செண்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் 12 செண்ட் சொத்தாகும். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சுவாமிநாதன் பெயரில் உள்ள சொத்தை விற்றுவிட்டாரா என்றால் என் அம்மாவிற்கு 2 செண்ட் சொத்து எழுதிக்கொடுத்துள்ளார், மற்றொரு 2 செண்ட் சொத்து கல்லறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன என் அம்மாவிற்கு எழுதிக்கொடுக்கப்பட்ட 2 செண்ட் சொத்திற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மொத்த பட்டிகை சொத்து 5 செண்ட் சொத்தில் எத்தனை செண்ட் வழிப்பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் செண்ட் அளவாக குறிப்பிடப்படவில்லை வழிப்பாதையை தடை செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).